மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

வாரம் - 13

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. “அவனி பண்டு ஆண்ட வேந்தரை இழித்து…” இங்கு இடம்பெறும் அவனி என்ற சொல்லின் பொருள்
   i. ஞாலம் ii ஞானம் iii ஆரணியகம் iv சுவர்க்கம்

2. “பின்னும் துணிவு இலராய் பேதுறுதல் மாந்தர் குணம்” இங்கு மாந்தர் எனப்படுவோர்
   i. மகளிர் ii மக்கள் iii மன்னர் iv பெரியோர்

3. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற கூற்றில் இடம்பெறும் கேளிர் என்பதன் எதிர்ப்பதம்
   i. நண்பர் ii உறவினர் iii பகைவர் iv தமர்

4. “பறம்பு மலை மக்களின் அன்பை எவ்வாறு விட்டுச்செல்வது” அன்பு என்பதன் எதிர்ப்பதம்
   i. வன்பு ii நட்பு iii உறவு iv பண்பு

5. “அமிழ்தம் இயைவதாயினும் இனியது என தமியர் உண்டலுமிலர்” இங்கு தமியர் எனப்படுவது
   i. தனித்தவராய் ii இணைந்தவராய் iii சேர்ந்தவராய் iv விரும்பியவராய்

பகுதி 2

01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக

i. இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில் இலட்சியம் பற்றிக் கூறப்பட்டவற்றை குறிப்பிடுக

ii. சமூகத்திற்கும் இலட்சியத்திற்கும் இடையிலான தொடர்பு யாது?

iii. இலட்சியமில்லாத உலகம் இனிமைதராது என்பதை கட்டுரையாசிரியர் எவ்வாறு எடுத்துக்காட்டுகின்றார்?

iv. இலக்கியங்களின் ஊடாக நாம் காண்பது யாது? உணர்ந்துகொள்வது யாது?

v. இலக்கியத்திறவுகோலுக்கு உதாரமாக கட்டுரையாசிரியர் எடுத்துக்காட்டும் நிகழ்வு யாது?

vi. உயிர்வாழ்வதற்காக இலட்சியத்தை கைவிடும் செயற்பாடு எதற்கு உவமிக்கப்படுகின்றது?

vii. அருச்சுனன் மானம் பற்றி யாது கூறுகின்றான்?

viii. இப்பாடப்பரப்பில் பேசப்பட்ட இலட்சியங்களையும் அவற்றை கடைப்பிடித் தொழுகிய இலட்சிய வாதிகளையும், அவ்விலட்சிய வாதிகள் பேசப்படுகின்ற இலக்கியங்களையும் எடுத்துக்கூறுக

ix. இலட்சித்திற்காக தம் வாழ்வை தியாகம் செய்த இலட்சிய வாதிகளை குறிப்பிடுக

x. இலட்சியத்திற்காக இலட்சியப்பயனை தியாகம் செய்த இலட்சியவாதிகள் யாவர்